பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

16 08 2024 **FRIDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் **EOS-08,** வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டிருப்பதற்கு இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2. ஹரியானா, ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

3. 2022-ஆம் ஆண்டுக்கான தேசிய திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. சிறந்த தமிழ் திரைப்படமாக பொன்னியின் செல்வன் பாகம்-1 தேர்வு செய்யப்பட்டுள்ளது.

4. தமிழகத்தில் கூட்டுறவு வங்கிகள் மூலம், நடப்பாண்டில் 24 ஆயிரம் கோடி ரூபாய் கடன்கள் வழங்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

5. நீட் தேர்விலிருந்து விலக்கு பெறுவதற்கான உறுதியான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பாமக வலியுறுத்தியுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் --*</u>

**<<<<<>>>>**

புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் **EOS-08,** வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டிருப்பதற்கு, இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

குறைந்த செலவிலான இந்த ராக்கெட் விண்வெளி ஆய்வுப்பணிகளில் முக்கிய பங்கு வகிப்பதோடு, தனியார் தொழில்துறையினரையும் ஊக்குவிக்கும் என்று அவர் தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரோவின் சாதனையில் குறிப்பிடத்தக்க மைல்கல் இது என்றும், இதற்காக இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு வாழ்த்துகளை தெரிவிப்பதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி அதில் கூறியுள்ளார்.

முன்னதாக, இன்று காலை ஸ்ரீஹரிகோட்டாவின் சத்திஷ்தவன் விண்வெளி மையத்திலிருந்து **EOS-08** உட்பட மூன்று சிறிய ரக செயற்கை கோள்களும் விண்ணில் வெற்றிகரமாக செலுத்தப்பட்டன.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரோ தலைவர் திரு சோம்நாத், ஆளில்லா ககன்யான் விண்கலம் சோதனை வரும் டிசம்பரில் நடைபெறும் என்று தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - சோம்நாத் (1) – 30 செகண்ட்ஸ்)*

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரபட்டிணத்தில் அமைக்கப்பட்டுவரும் விண்வெளி ஏவுதளம் இரண்டாண்டுகளில் நிறைவடையும் என்றும் திரு சோம்நாத் கூறினார்.

*(வாய்ஸ் பைட் - சோம்நாத் -(2) – 10 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>

ஹரியானா மற்றும் ஜம்முகாஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார், ஹரியானா மாநிலத்தில் அக்டோபர் ஒன்றாம் தேதி ஒரே கட்டமாகவும், ஜம்மு காஷ்மீருக்கு அடுத்தமாதம் 18, 25, மற்றும் அக்டோபர் ஒன்றாம் தேதி என மூன்று கட்டங்களாகவும் வாக்குப்பதிவு நடைபெறும் என்று தெரிவித்தார்.

வாக்கு எண்ணிக்கை அக்டோபர் நான்காம் தேதி நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் 90 உறுப்பினர்களை கொண்ட சட்டப்பேரவைக்கு 87 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

அங்கு 11 ஆயிரத்து 800 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

ஹரியானாவை பொறுத்தவரை 2 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளதாகவும், 20 ஆயிரம் வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட இருப்பதாகவும் திரு ராஜீவ்குமார் கூறினார்.

<<<<<>>>>

2022-ஆம் ஆண்டுக்கான தேசிய திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

“காந்தாரா” படத்தில் நடித்த கன்னட நடிகர் ரிஷப் ஷெட்டி சிறந்த நடிகருக்கான விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

“திருச்சிற்றம்பலம்” படத்தில் நடித்த நித்யாமேனன், “கட்ச் எக்ஸ்பிரஸ்” குஜராத்தி படத்தில் நடித்த மானசி பரேக் ஆகியோர் சிறந்த நடிகைக்கான விருதை பகிர்ந்துகொள்கிறார்கள்.

சிறந்த தமிழ் திரைப்படமாக பொன்னியின் செல்வன் பாகம்-1 தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இதேபடத்திற்கு பின்னணி இசைக்காக ஏ ஆர் ரகுமானும், ஒளிப்பதிவுக்காக ரவி வர்மாவும், ஒலி அமைப்பாளருக்காக ஆனந்த் கிருஷ்ணமூர்த்தியும், தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

<<<<<>>>>

தமிழக அரசின் சாதனைகளை மக்கள் மன்றத்தில் கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பு திமுக-வினருக்கு உள்ளதாக அக்கட்சியின் தலைவரும், முதலமைச்சருமான திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னையில் இன்று அக்கட்சியின் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் பேசிய அவர், ஒவ்வொரு வீட்டிலும் யாராவது ஒருவர் பயனடையக்கூடிய திட்டங்களை தமது அரசு நிறைவேற்றியிருப்பதாக கூறினார்.

முன்னதாக, மறைந்த முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதியின் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியிட உள்ள மத்திய அரசுக்கு நன்றி தெரிவிப்பது உள்ளிட்ட மூன்று தீர்மானங்கள் இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

<<<<<>>>>

தமிழகத்தில் கூட்டுறவு வங்கிகள் மூலம், நடப்பாண்டில் இதுவரை 24 ஆயிரம் கோடி ரூபாய் கடன்கள் வழங்கப்பட்டுள்ளதாக மாநில கூட்டுறவு மற்றும் நுகர்பொருள் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் திரு ஜெ. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் அரங்கநல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் பல்வேறு ரேஷன் கடைகள் கூட்டுறவு தானிய சேமிப்புக் கிடங்குகளை ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - ராதாகிருஷ்ணன் - 27 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>

நீட் தேர்விலிருந்து விலக்கு பெறுவதற்கான உறுதியான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பாமக வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் நீட் தேர்வு கொண்டுவரப்பட்ட கடந்த எட்டாண்டுகளில் இத்தேர்வில் தோல்வியடையும் மாணவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் தொடர்வதாக கூறியுள்ளார்.

நீட் தேர்வின் நோக்கம் நிறைவேறாத நிலையில், அதனை ரத்து செய்ய மத்திய அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ள திரு அன்புமணி ராமதாஸ், தமிழகத்திற்கு மட்டுமாவது விலக்கு அளிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் சாரல் திருவிழா இன்று தொடங்கியுள்ளது.

தமிழக தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் வரும் 19-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இந்த விழாவில் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - செந்தில் - 40 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே நயம்பாடி கிராமத்தில் உள்ள கங்கை அம்மன் - ரேணுகாம்பாள் கோவில் கும்பாபிஷேக விழாவில் மாநில அமைச்சர் திரு செஞ்சி மஸ்தான் உட்பட ஏராளமானோர் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

------------------

நாகை - இலங்கை காங்கேசன்துறை இடையேயான பயணியர் கப்பல் சேவை இன்று மீண்டும் தொடங்கியது.

---------------

திருவாரூர் வருவாய் கோட்ட அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 22-ஆம் தேதி நடைபெறும் என்று கோட்ட அலுவலர் திருமதி சௌமியா தெரிவித்துள்ளார்.

-----------------

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு அம்மாவட்ட ஆட்சியர் திரு தர்பகராஜ் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

--------------

பள்ளி, கல்லூரிகளுக்கு அருகே போதைப்பொருட்கள் விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு சிவபிரசாத் தெரிவித்துள்ளார்.

---------------

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் இன்று செவிலிமேடு நலவாழ்வு மையம் மற்றும் பல்லவன் நகர் நியாயவிலை கடையினை மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

---------------

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கும் வாகனங்களின் அகில இந்திய அளவிலான கண்காட்சி இன்று தொடங்கியது.

---------------

கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழியில் நடைபெறும் ரயில்வே மேம்பாலப்பணிகள் விரைவில் நிறைவடையும் என்று தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<<>>>>

மத்திய அரசின் ஒலிம்பிக் பயிற்சி இலக்கு திட்டத்தின்கீழ், பாரிஸ் பராலிம்பிக் போட்டியில் 50 வீரர்கள் பங்கேற்க இருப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

பாராலிம்பிக் போட்டிகள் இம்மாதம் 28-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 8-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளன.

இப்போட்டியில், இந்தியா சார்பில் 47 தடகள வீரர்கள் உட்பட மொத்தம் 84 பேர் பங்கேற்கின்றனர்.

இந்திய வீரர்களை பாராலிம்பிக் போட்டிக்கு அனுப்பிவைக்கும் நிகழ்ச்சியில் பேசிய மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா, மத்திய அரசு அளித்த பயிற்சியின் காரணமாக 50 பேர் பயனடைந்து, தற்போது இந்த போட்டியில் பங்கேற்க இருப்பதாக தெரிவித்தார்.

அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் மத்திய அரசு செய்து கொடுத்ததாகவும், கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் மூலம் பலர் இதற்கு தகுதி பெற்றதாகவும் திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<<>>>>

இந்திய ‘ஏ’ மகளிர் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், ஆஸ்திரேலியா “ஏ” மகளிர் அணி எட்டு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஆஸ்திரேலியாவின் ‘Mackay’-யில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் விளையாடிய இந்திய ஏ அணி, 48 ஓவரில் 218 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

219 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய ஆஸ்திரேலியா ஏ அணி, 40 புள்ளி இரண்டு ஓவரில் இரண்டு விக்கெட்டை மட்டுமே இழந்து 221 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

<<<<<END>>>>>